செய்திக்குறிப்பு எண் :- 408 நாள் :- 15.11.2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 15.11.2012

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிகோட்டை வட்டம், கண்டகானப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. கெம்பண்ணா என்பவர் 12.11.2012 அன்று தொட்டனப்பள்ளி கிராமம் அருகே காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த திரு. கெம்பண்ணா குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான திரு. கெம்பண்ணா குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9